3,500 ப்ளாட்பாரம் ட்வெல்லர்ஸ் இருக்கிறார்கள். இதில் 350 பேர்களுக்குத்தான் ரிஹாபிலிடேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளேயே குடியிருப்பு வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தில் நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : நடைபாதையில் இருக்கிறவர்களை அப்புறப்படுத்தி வேறு இடத்தில் இவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தவுடன், வேறு சிலர் நடைபாதையில் உள்ள இந்த இடங்களுக்கு குடியிருக்க வந்துவிடாமல் பார்த்துக்கொள்ள என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : புதிதாக நடைபாதைக்கு யாரும் வரவில்லையென்று சொல்ல விரும்புகிறேன். முன்பு இரண்டடி, மூன்றடி அகலம் ப்ளாட்பாரம் இருந்தது. அங்கிருந்தவர்களை அப்புறப்படுத்தியவுடன் அந்த நடைபாதையை 1½ அடியாகக் குறைத்துவெட்டி ரோடை அகலப்படுத்திவிட்டோம்.

Valluvar Gurukulam, Tambaram

* 800 Q.—SRI MUNU ADHI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are aware that the land acquired from the Chingleput District Board, for the use of the inmates of the Valluvar Gurukulam at Tambaram has since been leased for the construction of a Cinema theatre;

(*b*) whether that land has since been sold to a third party;

(*c*) the amount realised by the sale; and

(*d*) whether the sale proceeds have been utilised for the welfare of the inmates of the Orphanage and if so, how?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No land assigned to the Gurukulam has been leased for the construction of a Cinema theatre.

(இ), (உ), and (எ) Do not arise.

கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

* 801 கேள்வி.—திரு. புலவர் கா. கோவிந்தன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் எத்தனை பொலிக் காளைகள் வழங்கப்பட்டுள்ளன?

(இ) அவற்றை வழங்குவதற்கான விதிமுறைத் திட்டங்கள் யாவை?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 943.

(*b*) *The following are the rules governing the distribution*—

(i) *Under the All-India Key Village Scheme and the Scheme for procurement and distribution of bulls.*—The custodians are paid a monthly subsidy of Rs. 30 per bull for a period of five years for maintaining the bulls.